[2013 ஏப்ரல் 29

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அந்தச் சாலையினை அகலப்படுத்தித் தர வேண்டும் என்று வினா தொடுத்திருக்கிறார்கள். அதனை ஆய்வு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், போக்குவரத்துச் செறிவு அதிகம் இருக்கும்பட்சத்தில் அந்தச் சாலையை அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 343, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

343—

பால் பதப்படுத்தும் தொழிற்சாலை

***14497—திரு. க. கோபால்சாமி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் தொகுதியில் பால் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

ராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியில் 17 கூட்டுறவு பால் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மொத்த பால் உற்பத்தி, நாள் ஒன்றுக்கு 19,735 லிட்டர். இச்சங்கங்களின்மூலம் உள்ளூர் விற்பனை நாள் ஒன்றுக்கு 15,343 லிட்டர் ஆகும். மேற்கண்ட சங்கங்களுக்கு ஒன்றியத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும் பால் 4,390 லிட்டர். ராஜபாளையம்

தொகுதியிலிருந்து 12 கி.மீ. தூரத்தில் நாள் ஒன்றுக்கு 30,000 லிட்டர் திறன் கொண்ட திருவில்லிபுத்தூர் பால் பண்ணைக்கு மேற்கண்ட சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் 4,200 லிட்டர் பால் அனுப்பப்பட்டு, பதப்படுத்தப்பட்டு வருகிறது. ராஜபாளையம் தொகுதியில் பால் உற்பத்தி மேலும் அதிகரித்து, கொள்முதல் உயரும்பட்சத்தில், அதனை ஆய்வு செய்து தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணை பெற்று பால் பதனிடும் நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.

திரு. க. கோபால்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழ்மையும், இல்லாமையும், கல்லாமையும் தமிழக மக்களுடைய தலைவிதி என்பதை மாற்றி அமைத்தவர் வாழும் பிரம்மா எங்களின் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) பிரபஞ்சத்தில் வாழ்கின்ற தமிழர்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கின்ற காலத்தாலும், காவியத்தாலும் போற்றப்படுகின்ற, மனித உள்ளங்களால் நேசிக்கப்படுகின்ற தேசியத் தலைவியே, தமிழகத்தில் இரண்டாம் வெண்மைப் புரட்சியை உருவாக்க கோமாதா தந்து கொண்டிருக்கின்ற எங்களின் குல மாதாவே, (மேசையைத் தட்டும் ஒலி) மாட்சிமைதங்கிய தமிழ்நாடு முதலமைச்சர், நாளைய பாரதப் பிரதமர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-45

ராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியிலே, ஆர்-56 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் மிகப் பழமையான கூட்டுறவுச் சங்கம். இக்கூட்டுறவுச் சங்கத்திற்கு 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பாலைச் சேமிக்கும் குளிர்சாதன வசதி செய்துகொடுத்தால், இன்னும் அதிக பாலைக் கொள்முதல் செய்து மக்கள் பயன்பாட்டிற்கு அளிக்க வசதியாக இருக்கும் என்பதால் அதை அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டு அமர்கிறேன்.

[2013 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று, பால் குளிரூட்டும் வசதி செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.*

திரு. க. கோபால்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 344, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

344—

பாலங்கள் கட்டுதல்

***9972—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுக்கூர் ஊராட்சி, ராஜ வாய்க்கால் மற்றும் சின்ன வாய்க்காலின் குறுக்கே பாலங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*